**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.102/2017</u>** **தேதி.14.11.2024**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 14.11.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜார்ஜ் |
| த/பெ. | : | ராஜையன் |
| வயது | : | 51/2024 |
| தொழில் | : | வியாபாரம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | ஆற்காடு |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் தற்போது இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். நான் செய்யும் வியாபாரம் அன்னை ஸ்டீல்ஸ் என்ற பெயரில் ஆற்காட்டில் உள்ளது. பிரதிவாதி எனக்கு தூரத்து சொந்தம் ஆவார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் என்ன வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் வாதிக்கும், பிரதிவாதிக்கும் வீடு கட்டி காலி செய்வது சம்பந்தமாக நாங்கள் போட்டுள்ளோம். சாட்சி தற்போது பிரதிவாதி விஜயகுமார் போட்டுள்ளதாக கூறினார். தாவா வீட்டை வாதி அவருடைய அப்பாவிடமிருந்து எழுதிவாங்கிக்கொண்டார். பிரதிவாதிக்கு தெரியாமல் அந்த வீட்டை எழுதி வாங்கிகொண்டார். தாவா வீட்டை வாதி அவருடைய அப்பாவிடமிருந்து எழுதி வாங்கி கொண்டது எப்போது தெரியவந்தது என்று சொன்னால் இந்த வழக்கு நடைபெற்றுகொண்டிருந்தபோதுதான் தெரியவந்தது.

சாட்சி தற்போது வாதியின் அப்பா இறந்துவிட்ட பிறகுதான் தெரியவந்தது என்று சொன்னார். வாதியின் தந்தை வாதிக்கு எழுதிக்கொடுத்ததுபோலவே அவரமது மற்றொரு மகனாக பாஸ்கருக்கும் சொத்தை எழுதிகொடுத்துள்ளார். பாஸ்கருக்கு அவர் அப்பா எழுதிக்கொடுத்த சொத்து தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமான சர்வே நெம்பர், நான்கு எல்லைகள் மற்றும் அளவுகள் எதுவும் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தற்போது யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் தாவா சொத்தில் வடக்கு பக்கம் வாதி ரவி குடியிருந்து வருகிறார். முன்பக்கத்தில் வாதி விஜயகுமார் குடியிருந்து வருகிறார். தாவா சொத்தை வாதியின் தகப்பனார் யாரிடமிருந்து எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வாதியானவர் அவரது தந்தை எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம்தான் தாவா சொத்தில் உரிமை கோருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு அவரது தந்தை எழுத்துமூலமாக எதையும் எழுதி தரவில்லை. வாய்மூலமாகதான் கொடுத்துள்ளார். வாய்மொழியாக எந்த சொத்தை எழுதி கொடுத்தார் என்றால் முன் பகுதியில் உள்ள சொத்தை கொடுத்தார். வாய்மொழியாக யார் முன்னிலையில் கொடுத்தார் என்றால் குடும்ப உறுப்பினர்கள் மூலம் கொடுத்தார் அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதி கூறியதின்பேரில் எனக்கு தெரியும். எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது என்றும் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**